இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 78 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 11 – புதன்கிழமை 28 அக்டோபர் 2026 – கோவை ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 78 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 11 - Wednesday 28 October 2026 - Kovai ★★ 10 Pages ₹ 5.00

தமிழ்நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டைக் கண்டித்து

அக்.31-ல் கழக மகளிரணி சார்பில் போராட்டம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.28–

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டைக் கண்டித்து வருகிற 31–ஆம் தேதி சனிக்கிழமை தமிழ் நாடு முழுவதும் கழக மகளிர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“பட்டப்பகலில் வெட்டவெளியில் தொடரும் கொலைகள்.”

சேலத்தில் பகல் நேரத்தில் பொது இடத்திலேயே கொலை நடந்திருக் கிறது.

மதுரையில் மாயமான சிறுவன் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறான்.

காணாமல் போன செஞ்சி சிறுமி எங்கே என்பது இப்போது வரை மர்மமாகவே இருக்கிறது.



வீடியோ கேம்கள், ஹாரர் திரைப்படங்களை மிஞ்சும் அளவுக்குத் தமிழ்நாட்டில் குற்றங்கள் பெருகி வருகின்றன.

த.வெ.க. ஆட்சியில் Free Run கிடைத் தது போல குற்றவாளிகள் அச்சமின் றிக் குற்றச் செயல்களைப் புரிகிறார்கள்.

தினமும் கொலைகளை எண்ணும் கொடிய நிலையில் தமிழ்நாடு இருக் கிறது.

சட்டம் ஒழுங்குக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல, முதலமைச்சர் ஏன் மவுனமாக இருக்கி றார்? சட்டம் ஒழுங்கு பற்றி வாய் கிழியப் பேசுவதில் வல்லவரான அவர் இப்போது ஏன் வாயே திறப்பதில்லை?

சட்டம் ஒழுங்கு சீர்கேட்டைக் கண்டித்து, வரும் சனிக்கிழமை (அக்டோபர் 31) தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் துள்ளார்.

தினமும் கொலைகளை எண்ணும் கொடிய நிலையில் முதலமைச்சரோ வாயே திறப்பதில்லை!



முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது!

மக்களின் கோபத்தை திசை திருப்பும் த.வெ.க. அரசின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக்.28–

அரசியல் காழ்ப்புணர்வோடு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கைது செய்யப்பட்டதற்கு கடும் கண்ட னம் தெரிவித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “சட்டம் ஒழுங்கு சீர் கேட்டால் நிலவிவரும் மக்களின் கோபத்தைத் திசை திருப்பித் தப்பித்துக் கொள்ளும் த.வெ.க. அரசின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது” என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“அரசியல் காழ்ப்புணர்வோடு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்க ளைக் கைது செய்துள்ள த.வெ.க. அரசுக்குக் கடும் கண்டனம்!

தன் மீதான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைக்கு முழு ஒத்து ழைப்பு வழங்கி வந்த அன்பில் மகேஸ் அவர்களைக் கைது செய் திருப்பதன் மூலம், சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கின் அவலட்சணத் தையும், அழுகிக் கொண்டிருக்கும் நிர்வாகச் சீர்கேட்டையும் சில நாட் களுக்கு மறைத்து, மக்களின் கவ னத்தைத் திசைதிருப்பிவிடலாம் என்று ஆளும் அரசு நினைக்கிறது.

அன்பில் மகேஸ் அவர்கள் தன் மீதான குற்றச்சாட்டுகளைச் சட்டப்படி எதிர்கொள்வார். அதேசம யம், இதுபோன்ற கைது நடவடிக் கைகளால் மக்களின் கோபத்தைத் திசைதிருப்பித் தப்பித்துக்கொள்ளலாம் என்றுநினைக்கும்த.வெ.க. அரசின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது!”

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட் டுள்ளார்.

புதிய உச்சத்தில்

வெங்காயம் விலை - ஒரு கிலோ ரூ.100 !

அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ந்து காய்கறி விலையும் உயர்வு!

சென்னை, அக். 28 -

வெங்காயம் விலை மீண்டும் புதிய உச்சத்தை தொட்டுள்ளது. சில்லரை விற்பனையில் கிலோ 100 ரூபாய் வரை விற்பனை யாகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து, காய்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது. குறிப்பாக வெங்காயம் விலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மகாராஷ்டிர மாநிலம் நாசிக் மற்றும் கர்நாடகா வின் பிற பகுதிகளில் இருந்து கோயம்பேடு சந் தைக்கு வெங்காயம் இறக் குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெளி மாநிலங்களி லிருந்து கோயம்பேடு சந் தைக்கு வரத்து கணிசமாக குறைந்ததால் விலை கடு மையாக உயர்ந்துள்ளது.

சென்னை கோயம் பேடு மொத்த விற்பனைச் சந்தையில் முதல் தர வெங்காயம் கிலோ 80 ரூபாய்க்கும், இரண்டாம் தர வெங்காயம் கிலோ 70 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மொத்த விற்பனைச் சந் தையில் இருந்து சில்லறை விற்பனைக் கடைகளுக் குச் செல்லும்போது விலை மேலும் அதிகரிப் பதால், பொதுமக்கள் கூடு தல் தொகை செலவிட வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.

கொலீஜியம் கூடுவதற்கு முன்பே சில பெயர்கள் குறித்து ஆலோசனை!

நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய அரசு தலையீடு!

உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தகவல்!

புதுடெல்லி, அக். 28 -

நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தலையிடுவதாக உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தனது புத்தகத்தில் தெரிவித்துள் ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் வித்தவுட் ஃபியர் ஆர் ஃபேவர் என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுதியுள் ளார். விரைவில் வெளியாக உள்ள இந்த புத்தகத்தின் சில முக்கிய விவரங்கள் ஊடகங்களில் கசிந்துள் ளன.

அதில், நீதிபதிகள் நிய மன விவகாரத்தில் அப்போ தைய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மோடி அரசிடம் அளவுக்கு அதிக மாக பணிந்து நடந்து கொண்டதாக நீதிபதி சஞ் சய் கிஷன் கவுல் தெரிவித் துள்ளார். நீதிபதிகள் நியம னத்தில் ஒன்றிய அரசின் தலையீடு இருந்தது என் றும், அதற்கான ஆதாரங்க ளையும் நீதிபதி கவுல் தனது புத்தகத்தில் வெளியிட் டுள்ளார்.

நீதிபதிகள் நியமனத் திற் கான கொலீஜியம் கூடுவ தற்கு முன்பே சில பெயர் கள் குறித்து அரசிடம் முன்கூட்டியே ஆலோ சனை நடத்த முன்னாள் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் விரும்பினார் என்றும் நீதிபதி கவுல் குற்றம் சாட்டி யுள்ளார்.

நீதிபதிகள் நியமனத்தில் அரசின் தலையீடு, கொலீஜி யம் கூடுவதற்கு முன் அர சின் ஒப்புதலைப் பெற மேற்கொள்ளப்படும் முயற் சிகள், சிறுபான்மை சமூகத் தைச் சேர்ந்த நீதிபதி ஒருவரின் சாதி குறித்து அரசு எழுப்பும் கேள்வி உள்ளிட்ட பல கவலைக்குரிய சம்பவங் களை நீதிபதி கவுல் தனது புத்தகத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார்.

பள்ளி மாணவர்களுக்கான இலவச

சைக்கிள் கொள்முதலில் ரூ.78 கோடி ஊழல்!

“த.வெ.க.வின் பார்ட்டி ஃபண்டுக்கு போகிறதா?” என சமூக ஆர்வலர்கள் கேள்வி!

சென்னை, அக். 28 -

அரசு பள்ளி மாணவர்களுக்கான இலவச சைக்கிள் திட்டத்தில் த.வெ.க. அரசு 78 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர் களுக்கு இலவச மிதிவண்டி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முந் தைய தி.மு.க. ஆட்சி இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியநிலை யில், தற்போதைய த.வெ.க. ஆட்சி ஸ்டிக்கர் ஒட்டி பெயர் மாற்றம் செய் துள்ளது. இந்நிலையில், ஹீரோ சைக்கிள்ஸ் எனும் இத்திட்டத்தில் த.வெ.க. அரசு 78 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அமேசானில் ஹீரோ சைக்கிள் 5 ஆயிரத்து 907 ரூபாய்க்கு விற் கப்படும்நிலையில், வெளிச்சந்தை யில் 7 ஆயிரத்து 363 ரூபாய் கொடுத்து விஜய் அரசு வாங்குகி றது. ஒவ்வொரு சைக்கிளுக்கும் கூடுதலாக ஆயிரத்து 456 ரூபாய் செலவிடப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது எந்த வகை ஊழல் என த.வெ.க. அரசுக்கு பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மொத்தமாக கொள்முதல் செய் யும்போது, விலை அமேசானை விட குறைய வேண்டுமே தவிர, அதிகரிக்கக் கூடாது என்பது கூட த.வெ.க. அரசுக்கு தெரியாதா? என்று பலரும் வினவியுள்ளனர். எதிலும் அடிப்படை புரிதல் இல்லாமல் செயல்பட்டு வரும் விஜய் அரசால் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணம் வீணாவ தாக சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

5 லட்சத்து 32 ஆயிரத்து 388 நவீன சைக்கிள்களை வாங்க அமேசானில் 314 கோடி ரூபாய் மட்டுமே செலவாகும்நிலையில், வெளிச்சந்தையில் 392 கோடி கொடுத்து விஜயின் டம்மி அரசு கொள்முதல் செய்கிறது. ஹீரோ சைக்கிள் திட்டத்தில் செய்யப்பட்ட 78 கோடி ரூபாய் ஊழல், த.வெ.க.வின் பார்ட்டி ஃபண்டுக்கு போகிறதா என சமூக வலைதளங் களில் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.